1. **சிவபெருமானின் தோற்றப் பொலிவையும் இறைவனிடம் திருஞான சம்பந்தர் வேண்டி பாடும் பாங்கினை விவரி.**

முன்னுரை:

- ★ சம்பந்தரின் பாடல்கள் பன்னிரு திருமுறையில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவர் இறைவன் மீது பதிகங்கள் பாடி பல அற்புதங்களை நிகழ்தியுள்ளார்.
- ★ திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்க்க, கிழக்கு கோபுர வாசலில் சம்பந்தருக்கும் மேற்கு கோபுர வாசலில் திருநாவுக்கரசருக்குமான இறைவன் படிக்காசு நல்கிய நிலையில் தனக்கு அளிக்கப்பட்ட காசின் குறைபாடு தீர இறைவனிடம் வேண்டுவதால் இப்பதிகம் அமைகிறது.

இறைவனின் தோற்றப் பொலிவு:

- ❖ குற்றமற்ற செழிப்பான திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் இறைவனான சிவனின் தோற்றங்களை ஞானசம்பந்தர் பலவாறு புகழ்கிறார்.
- ❖ மறையாகிய வேதத்தினை பெற்றுள்ளவன். செம்மேனியை உடையவன். படமாடும் பாம்மை தலையிலும் இடுப்பிலும் அணிந்திருப்பவன்.
- ❖ உடலெல்லாம் திருநீறு பூசி காட்சியளிப்பவன். அடியார்கள் துயர் நீக்க காளை வாகனத்தில் காட்சி அருள் பாலிப்பவர்.
- ❖ பிணித்துக் கட்டிய சடைமுடியை உடையவன். தேவர்களைக் காக்க விஷத்தை உண்டதால் நீலகண்டத்தைப் பெற்றவன்.
- ❖ தன் மனைவியாகிய உமையை தன்னில் ஒரு பாகமாய் உடையவன். கங்கையை தன் சடையில் கொண்டவன்.
- ❖ சம்பந்தர் தனது அனைத்து பதிகங்களிலும் எட்டாவது பாடலில் இராவணன் கயிலை மலையை எடுத்து துன்புற்றதை கூறுவதாக அமைத்துள்ளார்.
- ❖ நான்முகனும் திருமாலும் முயன்று தேடியும் அடி முடியை அறிய இயலாத தன்மையினை உடையவன் சிவபெருமான் என தனது ஒன்பதாம் பாடலில் கூறுகிறார்.
- ❖ சமணர் அறியும் பொருளை அறிந்திடாது நிற்க வேறு உரைப்பவனாய் பொருளுக்குள் பொருளாய் விளங்குபவன் சிவபெருமான் என பத்தாம் பாடலில் கூறுகிறார்.
- ❖ சீர்காழியில் பிறந்த சம்பந்தன் உம்மை பாடுகிறேன் என பதினோராம் பாடலில் தன்னைப் பற்றி கூறுகிறார்.

முடிவுரை:

- ▪ திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் எழுந்தருளியுள்ள சிவனிடம் தமக்கு உயர்வு தாழ்வு இல்லாமல் மாசில்லாத காசு அளிக்கும் படி ‘வாசி தீரவே’ எனத் தொடங்கும் பதிகத்தை பாடினார்.
- ▪ இறைவனும் சம்பந்தர் கேட்டபடி மாசில்லாத காசு அளித்து அருளினார்.

2. **மாணிக்கவாசகர் இறைவனை சிக்கெனப் பிடித்த நிலைகளை விளக்குக?**

முன்னுரை:

- ❖ மதுரை அருகே திருவாதவூரில் பிறந்தவர். பெற்றோர் சம்புபாதசாரியார் - சிவஞானவதி. அந்தணர் குலம். வாதவூரடிகள் என்ற பெயரும் இவருக்கு உண்டு.
- ❖ கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அரிமத்தன பாண்டியனிடம் அமைச்சராக இருந்து தென்னவன் பிரம்மராயன் பட்டம் பெற்றவர்.

- பாண்டியன் குதிரைகள் வாங்கக் கொடுத்த பொன்னை எல்லாம் சிவப்பணிக்கு செலவிட்டார்.
- இதையறிந்த மன்னன் மாணிக்கவாசகரை சிறையிலிட்டான். இவருக்காக இறைவன் வைகையில் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தினான்.
- வந்திக் கிழவியின் பொருட்டு பிட்டுக்கு மண் சுமந்தும், பிரம்படி பட்டும் இறைவன் திருவிளையாடல்கள் புரிந்து வாதவூராரைக் காத்தார்.
- மாணிக்கவாசகர் பாடியது திருவாசகம், திருக்கோவை என்னும் இரு நூல்கள் ஆகும். இவை எட்டாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளன. இவர் 32 வயது வரை வாழ்தார்

அறியாமையை வெளிப்படுத்துதல்:

- அன்பாகிய கடலில் விளைந்த கிடைத்தற்கு அரிய அமிழ்தமாகிய சிவபெருமானிடம் பொய்யான இவ் வாழ்க்கைக்கு உதவும் அறிவினை பெருகச் செய்து நேரத்தை வீணடிக்கும்
- புழுத்த உடலோடு கூட அலைந்து திரியும் இழி தகைமை உடையவனாகிய எனக்கு செம் பொருளாக விளங்கும் சிவத்தின தன்மையை அருளுமாறு வேண்டுகிறார்.
- அறியாமையாகிய இருள் நிறைந்த இவ்வுலகத்தில் உன்னை உறுதியாகப் பற்றிக் கொண்டேன்.
- அடியேனது உள்ளத்தில் ஒளியாய் விளங்கும் இறைவனே! உண்மை நிலை இயலாத எனக்கு உயர்ந்த நிலையை அருளிய அன்பு மயமானவனே!
- அருளில் நிறைந்து என்னை காக்க வேண்டும் என சிவனிடம் வேண்டுகிறார்.

சிவபெருமானை போற்றுதல்:

- தாயே, தந்தையே இணை இல்லாத மாணிக்க மணியே! அருளே வடிவான பேரொளியே! நன்கு பழுத்த ஒப்பற்ற ஞானப்பழமே
- பேராற்றலுடன் அரிய தவம் இயற்றுபவர்க்கு அரசனே, ஞானநூல்களின் விளக்கமே புகழ்மொழிக்கு அப்பாற்பட்டு நிற்கும் அனுபவமே
- யோகத்தின் பயனே, உனக்கென்று ஒப்புமை கூற முடியாத தனி முதல்வனே, மும்மலக் கட்டுகளின் மூலத்தை களையும் பழமையான பொருளே
- தன்னை வந்து பற்றிக்கொள்ளுமாறு அடியேனுக்கு அருள் செய்பவனே, செழுமையான பேரொளியில் பிரம்மமே, ஞானச் செல்வமே எனச் சிவபெருமானை மாணிக்கவாசகர் போற்றுகிறார்.

3. பாவை நோன்பிற்காக ஆண்டாள் பாவையரை அழைக்கும் விதத்தினை விவரி?
   - பன்னிரு ஆழ்வார்களுள் திருமாலின் பெண் அடியவராக விளங்கியவர் ஆண்டாள்.
   - திருப்பாவை, நாச்சியார் திருமொழி போன்றவை இவர் இயற்றிய நூல்களாகும்.
   - திருப்பாவை பாடல்கள் பாவை நோன்பு பற்றியது. பாவை நோன்பின் அவசியத்தையும் பலன்களையும் ஆண்டாள் இப்பாடல்களில் எடுத்துரைக்கிறார்.

பாவையரை அழைத்தல்:

செல்வ வளமும் சிறப்பும் கொண்ட திரு ஆயர் பாடியில் உள்ள சேவை செய்யும் தகுதிகளைக் கொண்ட சிறுமியர்களே, அழகிய நுண்மையான வேலைப்பாடுகளையுடைய அணிகலன்களை அணிந்து கொண்டிருப்பவர்களே, மார்கழி மாத மழு நிலவு நாளில் விடியற் காலையில் குளத்தில் நீராட விரும்பி வருவோரெல்லாம் வாருங்கள் எனப் பாவையரை அழைக்கின்றாள்.

கண்ணனின் பெருமை:

- கூர்மையான 'வேல்' போன்ற ஆயுதத்தை கையிலேந்திய காவல் என்னும் கொடுந்தொழில் புரியும் நந்தகோபனின் மகள், கண்ணன் ஆவார்.
- கண்ணழகு உடைய யசோதை பிராட்டியின் திருக் குமாரன். இளஞ்சிங்கம் போன்ற வீரத்தை உடையவன்.
- அவனது திருமேனி கரியதாகவும், திருமுகம் அடியார்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் சூரியனையும் சந்திரனையும் போன்று அமைந்திருக்கும்.
- அழகு பெருமையும் கொண்ட நாராயணன் நாம் கடைபிடிக்கும் நோன்பிற்கு வேண்டிய பறையைத் தருவான். அதனால் அனைவரும் நோன்பு நோற்க வாருங்கள் என அழைக்கிறார் ஆண்டாள்.

நோன்பின் செயல்பாடுகள்:

- பூமியில் வாழ்வு சிறக்கும்படி வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மார்கழி மாத பாவை நோன்பிற்கு செய்யக் கூடிய செயல்பாடுகளை ஆண்டாள் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.
- திருப்பாற்கடலில் மெதுவாக நித்திரை செய்யும் பரந்தாமனது திருவடிகளின் பெருமைகளைப் பற்றி பாடித் துதிக்க வேண்டும்.
- விடியற்காலையில் நீராடி, நெய், பால், ஆகியவற்றை அருந்தாமல் விலக்க வேண்டும்.
- கண்களுக்கு அழகூட்டும் மையினைத் தீட்டுதல் கூடாது, கூந்தலிலே மலர்களைச் சூடாது, பூக்களை இறைவனுக்குச் சேர்க்க வேண்டும்.
- செய்யக் கூடாத செயல்களைச் செய்யாமலும் தவிர்க்க வேண்டும். பெரியோர்கள் தீயது எனக் கூறுகின்ற செயல்களைச் செய்தல் கூடாது.
- மற்றவர்க்கு தீமையைத் தருகின்ற புறங்கூறுதலை தவிர்க்க வேண்டும்.
- யாசிப்பவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேண்டியனவற்றை தாமே சென்று தர்மம் செய்தல் வேண்டும்.
- சந்நியாசிகளுக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் பிச்சையும் இயன்ற அளவு அளித்து மகிழ வேண்டும்.

4. <u>பாவை நோன்பின் பயனாக ஆண்டாள் இறைவனிடம் வேண்டுவன யாவை?</u>

மழை வேண்டுதல்:

- வாமன அவதாரம் மேற்கொண்டு திருவிக்கிரமனாக ஓங்கி உயர்ந்து வளர்ந்து மூன்று உலகங்களையும் தம் திருவடிகளால் மூவடியாக அளந்த உத்தமனான எம்பெருமானின் திருநாமங்களைப் பாடி மேற்கொள்ளும் இப் பாவை நோன்பிற்காக நீராடினால் தீமையற்று மாதந்தோறும் நாடு முழுவதும் மூன்று மழை பெய்யும் என்கிறார்.
- அவ்வாறு மழை பெய்தால் அதன் பயனாய் செந்நெல் ஓங்கி உயர்ந்து வளரும். செந்நெல் வயல்களில் ஊடே கயல்மீன்கள் துள்ளி விளையாடும்.
- அங்குள்ள குவளை மலர்களில் வரிகளை உடைய வண்டுகள் தேனை உண்ட மயக்கத்தில் உறங்கிக் கிடக்கின்றன.
- பெருத்த மடிகளைக் கொண்டிருக்கின்ற பெரிய பசுக்கள் வள்ளல்களைப் போன்று பால் குடங்களை நிரப்புகின்றன.

- இவ்வாறு மழையின் பயனாக நாடு செழித்து வளரும். இதனால் நாட்டு மக்கள் கவலையின்றி வாழ்வர்.

<u>மழை பொழிதல்:</u>

- அதிக ஆழம் கொண்ட கடல் நிறையும் அளவிற்கு மழை வளத்தை அளிக்கின்ற பெருமை வாய்ந்த திருமாலிடம் மழை எவ்வாறெல்லாம் பொழிய வேண்டும் எனக் கூறுகிறாள் ஆண்டாள்.
- திருமாலே, நீ ஒரு சிறிதும் ஒளிவு மறைவு இல்லாமல் கடல் ஆழம் ஆழத்தின் உள்ளே சென்று அங்குள்ள நீரை அள்ளிக் கொண்டு வந்து வானில் சென்று சேர்க்க வேண்டும்.
- மாசற்று விளங்கும் உலக முதல்வன் திருமாலின் கருநிற மேனியைப் போல் கறுத்த அழகான தோள்களைப் பெற்றுள்ள பத்மநாபனின் கையில் உள்ள திரு ஆழி போல் மின்னல் மின்ன வேண்டும்.
- இடக்கையில் உள்ள வலம்புரிச் சங்கு அதிர்ந்து முழங்குவது போல இடி முழங்க வேண்டும்.
- மேலும் அவனது சார்ங்கம் என்னும் வில்லிலிருந்து பாய்ந்து வரும் அம்பு மழை போன்று கால தாமதமின்றி இவ்வுலக மக்கள் மகிழும் வண்ணம் மழை பொழிய வேண்டும்.
- அவ்வாறு பெய்தால் பாவையரும் பாவை நோன்பினை மகிழ்ந்து நீராடுவர். இவ்வாறு ஆண்டாள் திருமாலிடம் மழையினால் உண்டாகும் செல்வ வளத்தினையும் அதனால் மக்களின் மகிழ்வையும் எண்ணி வேண்டுகிறார்.
- மழை எவ்வாறெல்லாம் பொழிய வேண்டும் என்று கூறும் பொழுது, கண்ணனின் திருவுருவத்தையும் அவனது ஆயுத த்தையும் உவமையாகக் கொண்டே பாடலைப் பாடுகின்றார்.
- எங்கும் கண்ணன் எதிலும் கண்ணன் என்ற எண்ணத்திலேயே ஆண்டாள் வாழ்ந்தது அவரது பாடல் வரிகளின் மூலம் அழகாக வெளிப்படுகிறது.

5. <u>திருப்பள்ளியெழுச்சியில் காணும் காலைப்பொழுதின் வருணனைகளை விளக்குக.</u>

திருமாலின் புகழைப் பாடும் அடியவராகத் தம் பெயரைத் தொண்டரடிப் பொடியாழ்வார் என மாற்றிக் கொண்டார். திருப்பள்ளியெழுச்சி, திருமலை என்பன இவர் பாடிய நூல்களாகும். திருவரங்கத்தில் பள்ளிகொண்டுள்ள அரங்கநாதனை துயிலெழுப்புவதற்காகப் பாடப்பட்ட பாடலே திருப்பள்ளியெழுச்சி ஆகும்.

<u>கதிரவன் உதித்தல்:</u>

- காலைத் கதிரவன் கிழக்கு திசையின் உச்சியிலே தோன்றி விட்டான். அதனால் அடர்ந்த இருள் விலகி விட்டது.
- அதிகாலை நேரத்தில் மலர்கள் தேன் துளிர்க்கிறது. கிழக்கே இருந்து வீசும் இனிய காற்று வளமாக வளர்ந்து பூத்துக் குலுங்கும் முல்லைக் கொடியில் மலர்ந்த மலர்களைத் தழுவிய வண்ணம் வீசுகிறது.
- அனைத்து திசைகளிலும் சூரியனின் ஒளி பரந்து விட்டன. நெருக்கமாக இருந்து கொண்டிருக்கும் விண்மீன்களின் ஒளி குறைந்து வருகிறது. சந்திரனும் தன்னுடைய ஒளியைக் குறைத்துக் கொண்டு வருகிறான்.

காலை நேரக் காட்சிகள்:

- தேவர்கள் அரசர்கள் அவ்வப்போது உன்னிடம் நெருங்கி வந்து திருமாலை வணங்கும் பொருட்டு காத்து நிற்கின்றனர்.
- இரவு நேரத்தில் பூப்படுக்கையில் இனிய சுகமுடன் உறங்கிக் கொண்டிருக்கின்ற பறவை தங்கள் இறக்கைகளை உதறிக் கொண்டு எழுகின்றன.
- பசுமை மிக்க பாக்கு மரங்கள் தன் பாளையைச் சிறியவாறு பால் மணத்துடன் காலைத் தென்றல் காற்று மெல்ல வீசுகின்றது.
- வண்டுகள் ரீங்காரமிடும் மலர் மாலைகளை கையில் ஏந்திக் கொண்டு வந்து உன்னை வணங்குவதற்கு தேவர்கள் காத்துக் கொண்டு இருக்கின்றனர்.
- அயோத்தியில் இருந்து இலங்கை செல்லும் வழியில் வீடணன் என்னும் அந்நாட்டு மன்னன் இத்திருவரங்கப் பதியில் எழுந்தருளச் செய்த அரங்கநாதனே எங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பள்ளி எழுந்தருள்வாயாக.
- இவ்வாறு தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் காலை நேரம் புலர்வதை அழகிய வருணனைகள் மூலம் அழகாக எடுத்துரைக்கின்றார்.

6. <u>அதிகாலை ஓசைகளாக ஆழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் கூறுவனவற்றை விவரி?</u>

ஆழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் காலை நேரத்தில் கேட்கும் ஓசைகளை நயம்பட உரைக்கின்றார்.

காலை நேர ஓசைகள்:

- இளமையும் வளர்ச்சியும் ஒருங்கே அமைந்த எருமை மாடுகள் ஆயர்கள் காலே நேரத்தில் மேய்வதற்கு கட்டவிழ்த்து விட்ட போது ஆயர்கள் தங்கள் புல்லாங்குழலை இசைப்பதனால் உண்டாகின்ற ஓசை கேட்கின்றது.
- காளை மாடுகளின் கழுத்தில் கட்டி விட்ட மணிகளின் ஓசையும் ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்து எல்லாத் திசைகளுக்கும் சென்று பரவுகின்றன.
- வயல்களில் உள்ள பூக்களில் தேனை உண்ணுவதற்கான ஆராவாரம் செய்தபடி வண்டினங்கள் வெளியில் செல்கின்றன. அப்போது ரீங்கார ஓசை கேட்கிறது.

பறவைகளின் ஓசைகள்:

- பூஞ்சோலைகளில் உள்ள பறவைகள் எல்லாம் காலை நேரம் சூரியன் தோன்றிய உடன் தங்கள் ஒலிகளை எழுப்பிக் கொண்டு இரை தேடச் செல்கின்றன.

மற்ற ஓசைகள்:

- காலை நேரத்தில் திருமாலைக் காண தேவர்களும் அரசர்களும் வந்து காத்திருக்கின்றனர். அவர்களோடு ஆண் யானைகளின் கூட்டமும் பெண் யானைகளின் கூட்டமும் வந்து சேர்ந்து முழங்கும் சத்தம் கேட்கின்றது.
- யானையின் பிளிரல் சத்த த்தோடு காண தேவர்களும் அரசர்களும் வந்து காத்திருக்கின்றனர். அவர்களோடு ஆண் யானைகளின் கூட்டமும் பெண் யானைகளின் கூட்டமும் வந்து சேர்ந்து முழங்கும் சத்தம் கேட்கின்றது.
- யானையின் பிளிரல் சத்தத்தோடு சேர்ந்து கோயிலின் முரசு முழங்கும் ஒலியும் இணைந்து ஒலிக்கின்றது. இவையாவும் அலைகள் உடைய கடலோசை போல் எங்கும் பரவுகிறது.
- கிழக்கேயுள்ள கடலின் அலைகளினால் ஏற்படும் ஒலியும் காலை நேரத்தில் கேட்பதாக ஆழ்வார் கூறுகின்றார்.

- இவ்வோசைகள் எல்லாம் கேட்டும் உறங்கிக் கொண்டிருக்கின்ற திருவரங்கப் பெருமானை பள்ளியெழுப்புகின்றார் ஆழ்வார்.
- அழகிய திருக் கரங்களில் வன்மையும் ஒலியையும் ஒருங்கே கொண்ட சக்கரத்தினை ஏந்திக் கொண்டு இருக்கும் அரங்கனே உன் அறிதுயிலின்று நீங்கி எழுந்தருள்க என வேண்டுகிறார்.

7. <u>குலசேகர ஆழ்வார் திருவேங்கட மலையில் தாம் எவ்வாறு எல்லாம் இருக்க வேண்டும் என வேண்டுகிறார்?</u>

- குலசேகர ஆழ்வார் பிறந்த ஊர் திருவஞ்சைக் களம் என்னும் ஊராகும். சேர மன்னர் பரம்பரையில் பிறந்தவர்.
- அரச பதவியைத துறந்து பெருமாள் மேல் கொண்ட பக்தியால் வைணவத் தொண்டரானார்.
- திருமால் கதைகளைக் கூறும் அடியவர்களின் மேல் பேரன்பு கொண்டவர். தமிழில் பெருமாள் திருமொழியும் வடமொழியில் முகுந்த மாலையும் இயற்றியுள்ளார்.

<u>*குருகு:*</u>

- ♦ குலசேகர ஆழ்வார் திருமால் வீற்றிருக்கும் திருமலையில் பறவையாய் மீனாய் வாழ விரும்பினார்.
- ♦ இம் மனிதப் பிறவியை அடைய அடியேன் விரும்ப மாட்டேன். வளைந்திருக்கின்ற பாஞ்ச சன்னியம் என்னும் சங்கினை இடக்கையிலே வைத்திருக்கின்ற திருமால் வசிக்கும் திருவேங்கட மலையில் “திருக்கோனேரி” என்ற அழகிய திருக்குளத்தில் வாழக்கூடிய நாரையாக பிறக்க வேண்டும் என வேண்டுகிறார்.

<u>மீன்:</u>

- ♦ அழியாத செல்வமும் அரம்பையர்கள் என்னும் தேவ மாதர்கள் வாழும் தேவலோகத்தை ஆளுகின்ற செல்வத்தையும், இம் மண்ணுலகின் அரசும் கிடைப்பதாயினும் அதை விரும்பாது இருந்தார் ஆழ்வார்.
- ♦ தேன் நிறைந்த பூஞ்சோலைகள் நிறைந்திருக்கின்ற திருவேங்கட மலையில் உள்ள சுனையில் மீனாக பிறக்கும் பேற்றினை வேண்டினார்.

<u>செண்பக மரம்:</u>

- ♦ திருப்பாற் கடலிலே துயில் கொண்டிருக்கும் மாயோனான திருமாலின் இரண்டு திருவடிகளையும் அடியேன் கண்டு மனம் வணங்கும் படியாக அமைந்த திருவேங்கட மலையில், செண்பக மரமாக நிற்கும் பேறுடையவன் ஆவேன்.

<u>புதர்:</u>

- ♦ கண்டவர்கள் நடுங்கும்படியான அச்சத்தை உண்டாக்கும் யானையின் மேல் அமர்ந்து அனுபவிக்கும் செல்வத்தையும் அரசாட்சியையும் விரும்பேன்.
- ♦ எம்பெருமான் தங்கியிருக்கின்ற அழகிய திருவேங்கட மலையில் எதற்கும் பயனற்றதாக இருக்கும் புதராக நிற்கும் பேற்றினை பெற வேண்டுகிறார்.

குலசேகர ஆழ்வார் மனிதராய் வாழ்வதைவிட திருமால் வீற்றிருக்கும் திருவேங்கட மலையில் நாரை, மீன், மரம், புதர் என யாருக்கும் பயன் இல்லாமல் போனாலும் இறைவன் வாழும் இடத்தில் வாழவே ஆசைப்படுகிறார் என்பதை இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

8. **தமிழ்விடு தூது கூறும் தமிழின் சிறப்புகளை விளக்குக?**

தலைவி தமிழை இறைவனிடம் தூதுவிடும் போது அதன் சிறப்புகளை பலவிதமாக சிறப்பித்து கூறியுள்ளார்.

தமிழ் தேன்

- ✓ தேன் நாவால் சுவைத்து உண்ணப்படுவது. தமிழ் அறிவால் சுவைத்து நுகரப்படுவது. தேன் நாவால் சுவைத்து உடலுக்கு நன்மை தரும்.
- ✓ தமிழ் தேன் புத்தியால் சுவைத்து மனதிற்கு நன்மையை தருகின்றது.

பத்து குணங்கள்

- ✓ விண்ணில் உள்ள அனைத்தையும் உணர்ந்த தேவர்களும் கூட சத்துவம், இராசதம், தாமதம், என்னும் முக்குணங்களே.
- ✓ ஆனால் தமிழோ குற்றம் இல்லாத செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களைப் பெற்றுள்ளது.

கவிதைகளின் வண்ணம்

- ✓ மனிதரால் ஆக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை ஆகிய ஐந்திற்கு மேலில்லை.
- ✓ ஆனால் தமிழே! நீ புலவர் நோக்கி மகிழும் குறில் அகவல் தூங்கிசை வண்ணம் முதல் இடை மெல்லிசை வண்ணம் வரையிலான நூறு வண்ணங்களைக் கொண்டு விளங்குகின்றாய்.

பொருத்தம் பத்து

- ✓ அழியா இருள் வடிவில் பரவிய மயக்கத்தை மாற்றி மக்களை அறியாமையிலிருந்து கரையேற்றும் உன்னை மருட்பா என்று கூறுவது நல்ல வழக்கம்.
- ✓ சிந்தையைத் தெளிவிக்கும் உன் பாடலில் முதற்சீரிலேயே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் என்னும் பத்துவிதப் பொருத்தங்களை பெற்றுள்ளாய்.

மனதின் இருளை மாற்றுதல்

- ✓ உலகின் இருளை கதிரவன், நிலவு, நெருப்பு என்னும் முச்சுடரும் முந்தி வந்து தம் ஒளியால் விலக்கும் என்பார்கள்.
- ✓ ஆயினும் அவை உன்னைப்போல என் மனத்தின் இருளை போக்குவதில்லை தமிழே.

9. **சிவனின் தன்மைகளாக திருக்கையிலாய ஞான உலா கூறுவனவற்றை விளக்குக.**

- ★ சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கயிலாய ஞான உலாவே தமிழில் தோன்றிய முதல் உலா இலக்கியம் ஆகும்.
- ★ 197 கண்ணிகளை உடையது. இது சைவத் திருமுறைகளுள் 11ஆம் திரு முறையாக இடம்பெற்றுள்ளது.

சிவனின் உருவம்:

- ❖ நாராயணனும் பிரம்மனும் ஆழ்ந்து சிந்தித்து உணராமல் முன்னொரு காலத்தில் தீராத மயக்கத்தை அடை அப்போது தெய்வத் தீப்பிழம்பாய் சிவபெருமான் அவர்கள் முன் வெளிப்பட்டார்.

சு.அருண்குமார் எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எட்., எம்.ஃபில்., நெட். – மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி.

- கருவின் வாய்ப்படும் பிறவாமல் தூய வடிவுடன் தோன்றியவன் கண்களின் துணையைக் கொண்டு எவற்றையும் காண்பது மட்டும் அன்றி எல்லா வற்றையும் அறியும் பேரறிவால் எதனையும் காண்பவன்.

<u>நீங்காமல் நீங்கியிருப்பவன்:</u>

"ஆழாதே ஆழ்ந்தான் அகலாது அகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான்...."

- முறை முறையாக ஆழ்ந்து செல்லாமலேயே இயல்பாகவே ஆழ்ந்து இருப்பவன் எங்கும் நீங்காமல் நீங்கியிருப்பவன் முன் வினை செய்யும் முன்னேற்றத்தால் வளர்ந்து உயராமல் இயல்பாகவே உயர்வானவன்.

<u>அறிவு ஒளி:</u>

- அறிவு ஒளி ததும்பிய வேதநூல்களை எவரிடமும் சென்று சேர்ந்து கற்று உணராமலேயே தன்னுடைய முந்திய அறிவினால் பொருள்களை உணர்ந்திருப்பவன் நுண்ணியனாக இல்லாமலேயே அணுவிற்கு அணுவாக இருப்பது.

"யாதும் அணுகாது அணுகியான்......"

எப்பொருளையும் தான் அணுகாமலேயே அணுகி இருப்பவன்.

<u>உலகினைப் காப்பவன்:</u>

- முதன்மை பொருந்திய திருமாலின் மீது தங்கி உலகத்தைக் காப்பவன். நான்முகனிடத்தில் இருந்து உலகம் அனைத்தையும் படைப்பவன்.
- மேலும் உருத்திரன் இடத்தில் தங்கி படைத்தல், காத்தல் அனைத்தையும் ஒருங்கே செய்து கொண்டிருப்பவனும் சிவனே ஆவான்.

<u>வியன்மிகு மேனியன்:</u>

மேலான விண்ணவரும் காண முடியாத வியன்மிகு மேனியன்.

"எவ்வுருவில் பாரொருவர் உள்குவர் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்"

- எவ்வெவர் எந்தெந்த உருவில் இடையில்லாமல் நினைத்தால் அவரவர் விரும்பிய வடிவில் வந்து திருவருள் புரிபவன்.
- எல்லா உருவங்குளும் சிவனே ஆனாலும் புரத்திலும் காட்சி தருபவன். இத்தகைய பெருமையுடைய தன்மையை உடையவன் சிவபெருமான் எனச் சேரமான் பெருமாள் நாயனார் உரைக்கின்றார்.

10. தஞ்சைவாணன் கோவையின் அறியலாகும் செய்திகளை தொகுத்து எழுதுக.

<u>தஞ்சைவாணன் மலைச்சிறப்பு:</u>

- பல போர்களை வென்று கையில் வில்லுடன் விளங்கும் தஞ்சைவாணனின் மலையில் உள்ள குளத்தில் கெண்டை மீன்கள் நிறைந்த தாமரை மலர்ந்துள்ளது.
- ஒரு கற்பகத்தின் பக்கத்தில் பசிய காமவல்லிக்கொடி கண்ணெதிரே நின்றது. வெள்ளை நிறத்தையுடைய அன்னம், சிவந்த நெல்கழனி, பெரியகுளம் ஆகியவற்றை காணலாம்.

<u>பெண்ணைச் சிறப்பித்தல்:</u>

- தன் எதிரே வந்த பெண்ணை, பாரினிடத்துப் பொழிலின் மேலிருந்து புவியினுள்ளோர் சிறப்புச் செய்ய அச்சிறப்பைக் கொள்ளும் தெய்வப் பெண்ணோ!
- திருப்பாற் கடல்பெற்ற பங்கேருகத்துக்கண் இருக்கும் ஒப்பில்லாத தெய்வப் பெண்ணோ! மலைமகளோ!

- ★ உயர்ந்த பாவலர்க்குக் கோடி யானைனையக் கொடுக்கும் தஞ்சைவாணனது தென்மறை நாட்டகத்து வரும் வையை யாற்றின்கண் தோன்றிய நீர்மகளோ! என்று சிறப்பிக்கப்படுகிறார்.

<u>தலைவி வேட்கையை அறிதல்:</u>

- ★ மண்ணிலே மிகுந்த புகழையுடைய தஞ்சைவாணின் பொதிய மலையில் பெண்மையிற் சிறந்த இப்பேதையினது பார்வை பெரிய தீவினையேன் எண்ணத்தின் மிகுந்த பெரிய வேட்கை நோய் தனக்கு வருத்தப்பாடு செய்யாது, இன்பம் செய்யும் மருந்துமாகி, தலைவியின் கண்போல் சிறந்த உறுப்பிலை யாவதும் காட்டியது.
- ★ தஞ்சைவாணன் கோவையில் தஞ்சைவாணனின் மலைச்சிறப்பு, பெண்களின் சிறப்பு மற்றும் தலைவியின் வேட்கையை அறிதல் போன்ற அறிய செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

11. <u>பிள்ளைச்சிறு விண்ணப்பத்தில் இராமலிங்க அடிகள் என்ன வேண்டுகிறார்?</u>

இராமலிங்க அடிகளார் இறைவனின் திருவருளை வேண்டி பாடிய பாடல்களே திருவருட்பா ஆகும்.

<u>தந்தையும் தாயுமானவன் இறைவன்:</u>

- ➢ எனக்கு தாய் தந்தை நீ தான். உடல் வளர்ச்சியடைந்த மகன் தவறு செய்தால் தந்தை அடிப்பார்.
- ➢ உடனே தாய் அங்கே வந்து மகனை அனைத்துக் கொள்வாள். தாய் அடித்தாள் தந்தை தாயின் கைகளை பற்றி பிடித்துக் கொண்டு தன்னோடு அனைத்துக் கொள்வான்.
- ➢ திருநீறணிந்த திருமேனியை உடையவனாய்த் தில்லையம்பலத்தில் திருக் கூத்தாடும் தூயவனே, இவ்வுலகில் நூல்கள் உரைத்த தந்தையும் தாயும் நீயே!
- ➢ ஆதலால் இதுவரை உலகியல் துன்பங்களால் என்னை வருத்தியது போதும். இனி உனது அருளால் என்னை ஆதரிக்க வேண்டும்.
- ➢ இனி மேல் இத் துன்பத்தைப் பொறுக்க மாட்டேன்.

<u>என் குணங்களை நீயே அறிந்தவன்</u>

- ➢ அம்பலத்தில் திருக்கூத்து ஆடும் அருளரசே, எட்டு வகையான குணங்களையுடைய இறைவனே,
- ➢ என்னைப் பெற்ற அருள் வள்ளலே, தாம் பெற்ற பிள்ளைகளின் குணங்களை எல்லாம் பெற்றவராகிய தாய் தந்தையர் அறிவார்களே தவிர மற்றவர்கள் அறிய மாட்டார்கள்.
- ➢ நான் மேற்கொண்டுள்ள குணங்களால் கொடியவன் ஆயினேன். என்னுடைய குணங்கள் அனைத்தையும் நீயே நன்கு அறிவாய்.
- ➢ அறிந்திருந்தும் வெறுப்பது ஏன்? வெறுப்பை அகற்றி எனக்கு அருள் புரிய வேண்டும்.

<u>பற்றறு நிலை:</u>

- ➢ எனக்கென எப்பணியை செய்ய பணித்தாயோ அப்பணியைச் செய்வதன்றி வேறு எச் செயலையும் நான் செய்யவில்லை. நான் செய்துள்ளவை அனைத்தும் உன் திருவுள்ளம் நன்கு அறியும்.
- ➢ சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு இறை பதங்களை அடையும் ஆசையில்லை.
- ➢ இனி இந்த மண்ணுலகில் பிறக்கவும் ஆசையில்லை. விண்ணுலக வாழ்விலும் நாட்டமில்லை.

- எல்லோரும் 'இவர் முற்றும் அறிந்த பெரியவர்' எனப் போற்றிடவும் ஆசைப்படவில்லை.
- அனைவரும் வியக்கும்படியாகவும் பாராட்டும்படியாகவும் மந்திர தந்திர மாயாஜால விசித்திரங்களைச் செய்து புகழ் பெறவும் ஆசையில்லை.
- எல்லாவற்றையும் விடுத்து துறவு மேற்கொள்ளவும் ஆசையில்லை.
- இன்பங்களை இழந்து துன்பங்களில் உழன்று துயரத்தில் திளைக்கவும் ஆசையில்லை.
- இறைவன் அருள் ஒன்றே தனக்கு வேண்டும் என நம்பிக்கையோடு இராமலிங்க அடிகளார் வேண்டுகிறார்.

12. <u>பாதகர்கள் இயேசு பெருமானுக்கு வழங்கிய பழிச்சொற்களையும் வருத்திய விதத்தையும் பற்றிக் குறிப்பிடுக.</u>

- ★ கொடும் பாவிகள் ஒன்று சேர்ந்து இறைமகன் மீது நெருப்பு போலும் பழிச்சொற்களைச் சுமத்தி கடுமையாகப் பேசினர்.
- ★ அக்குற்றமொழிகளைக் கேட்ட இயேசு பெருமான் கருணையே வடிவான முறுவல் செய்து, தன் உள்ளத்து நிரம்பிய வேதனையால் தவித்து, சிந்தை வெந்து புண்பட்டாரே தவிர,
- ★ பிறரைப் பார்த்து சினந்து அவர்கள் நோகும்படியாக ஒரு வார்த்தை கூறாதிருந்தது அவரது போறுமைக்கு மணி மகுடம் போலானது.
- ★ இறைதிருமகனார் தன்னுடைய தீவினையை நினைந்து வருந்தினாரே அன்றி, பிறரைப் பழித்துப் பேசவில்லை.

  "பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
  ஏதுமில் கருணை பெம்மான் இதயத்து ஊன்ற"

  என்ற வரிகள் மேற்கூறிய கருத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- ★ இயேசு பெருமான் திருமுகத்திலே உமிழ்ந்தனர் சிலர், சிலர் அவர் வருந்தும்படி அடித்தனர். மலர் போன்ற திருமுகம் சிவக்குமாறு கண்ணைப் பொத்திக் குட்டினர் சிலர்.
- ★ இயேசு பெருமானைப் பார்த்து, "யார் பெருந்தகை என்று இப்போது பேசு பார்க்கலாம்" என கையை ஓங்கி தாக்க முற்பட்டதோடு, இகழ்ந்து பேசினர் சிலர்.
- ★ இப்படி இயேசு பெருமானை இகழ்ந்து பேசியும், இழி செயல்களால் அவமானப்படுத்தியும் வருத்தியபோதும் அவர் பொறுமையாகவே புன்னகை சிந்தினார்.
- ★ பிதாமகனின் கையிலுள்ள கோலினை வஞ்சகர்கள் கவர்ந்ததோடு, துன்பம் கொள்ளும் படியாகத் தலைமீது அடித்து வேதனை செய்தனர்.
- ★ அவரது திருமுகத்திலே உமிழ்ந்தனர். சுடுசொற்களால் வைதனர். தீவினையால் சூழ்ந்த நீசர்கள் பழிச்சொற்களால் ஏசவும் செய்தனர்.
- ★ அப்படி ஏசியதோடு கொல்லும் கூரிய நுனிகளையுடைய முட்களை ஒன்றாகப் பின்னிச் செய்த கிரீடத்தை குறுதி பீறிடும் படியாக பிதாமகரின் தலையில் அழுத்தி வைத்தனர்
- ★ இப்படி இயேசு பெருமான் மீது தகாத பழிச்சொற்களையும், வேதனை தரும் தண்டனைகளையும் கொடுத்து வருத்தினர்.

13. <u>இயேசு பெருமானுக்கு நடந்த கொடுமைகளைக் கண்டு நகர மக்கள் புலம்பிய விதத்தினைக் குறிப்பிடுக.</u>

- இயேசு பெருமானுக்கு கொலைஞர்கள் செய்த கொடுமைகளைக் கண்டு எதிர்க்கவும் இயலாமல், தவிர்க்கவும் முடியாமல் மக்கள் பெரிதும் வருந்தினர். செய்வதறியாது புலம்பினர். இதனை,

“என்கொல் மேதினி கீண்டு வெடித்தில தென்பார்
என்கொல் வானம் இடிந்து விழுந்தில தென்பார்”

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

- “இந்த உலகம் இரண்டாகப் பிளந்து வெடிக்கவில்லையே! வானமும் இடிந்து விழ மறுக்கின்றதே என்ன செய்வது? மிகப்பெரிய கடலும் கூட வற்றி விடாதோ? திருமகனுக்கு நடக்கும் இந்தக் கொடுமைகளுக்கு முடிவே இல்லையே? இந்த முடிவு ஏன் இத்தனை தாமதப்படுகிறது” என்று நகர மக்கள் புலம்பினர்.
- மேலும், பிதாமகனுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கண்டவர்கள் பார்க்கும் திறம் இல்லாதிருந்தால் இந்த கொடுமைகளைக் கண்டிருக்க இயலாது போயிருக்குமே, என்றனர் சிலர்.
- சிலர் இவ்வுலகத்தைப் பிடித்த பாவப் பிணிக்கு மாற்று மருந்தில்லை என்று சொல்லி வருந்தினர். வேறு சிலர் புண் படைத்த நெஞ்சோடு இந்த உயிர் இன்னும் உடலை விட்டுப் போகாமல் இருக்கின்றதே என்று வெதும்பினர்.
- இப்படி எண்ணற்ற மக்கள் இறைத் திருமகனுக்காக வருந்திப் புலம்பினர்.

14. <u>இயேசு பெருமான் கல்வாரி மலைக்குச் சென்ற காட்சியை விளக்குக.</u>

- அண்ணல் அணிந்திருந்த செவ்வாடையைக் களைந்து இறைமகன் முன்பு அணிந்திருந்த ஆடையை மீண்டும் உடுத்தி, அவரைப் ஏளனப் பேச்சுகள் பலபேசியதோடு, பகைவர்களாகிய கொடியவர்கள் ஒன்று சேர்ந்து சிலுவைதனை இயேசு பெருமான் மீது சுமத்தி, அந்நகர மக்கள் உள்ளம் கலங்கும்படியான பழிச்சொற்களைக் கூறிய படி இறைத் திருமகனைக் கட்டி இழுத்துச் சென்றனர்.
- மேலும், மலிந்த பாவம் திரட்டிச் செய்யப்பட்ட சிலுவையை அமலனாகிய இயேசு பெருமகனார் தம் சிரத்து ஏந்தி உலக உயிர்களைக் காப்பது ஒன்றையே தனது கடமையாகக் கொண்டு கல்வாரி மலைக்குச் சென்றார்.
- ஆராய்ந்து பார்த்தால் நூறாயிரம் கோடியளவு வலிமை வாய்ந்த மிகப்பெரிய யானையைப் போன்று அந்த சிலுவையின் பளு இருந்தது.
- மரணம் என்னும் கொடிய வாளின் கூர்மை ஒடியும் படியாகவும், வேதத்தின் உண்மை உலகினில் நிலைத்து நிற்கவும், பரிபூரணமான இறையருள் கைகூடுதற்குக் காரணமான காரியம் செய்து முடிப்பதற்காக கல்வாரி நோக்கிப் பயணப்பட்டார் இறைத்திருமகனார்.

15. <u>எம்பெருமான் சிலுவையை சுமந்த காட்சியைக் கண்டு எருசலை நகர மக்கள் வருந்திய விதத்தினைப் புலப்படுத்துக.</u>

- இயேசு பெருமான் மிக வலிமையான சிலுவையைச் சுமந்ததனால் அவரது வாய் உலர்ந்தது, கண்கள் அயற்சியால் இருண்டன. காதுகளும் அடைத்தன.
- கொடிய சிலுவையைச் சுமந்தபடி மெய்வருத்தி தூய திருவடிகள் சோர்ந்து, நடையும் தள்ளாடியபடி வீதி நடுவே ஐயன் நடந்து வருவதைக்கண்டு எருசலேம் நகரத்து மக்கள் மிகவும் வருந்தினர்.

<u>மகளிரின் வருத்தம்.</u>

- இறைத்திருமகனின் இந்நிலையினைக் கண்டு அங்கு குழுமியிருந்த பெண்களும் மிகவும் வருந்தினர்.
- அவர்கள் “பெண்களுக்குள் ஆசிபெற்றவராகிய அன்னை மரியாளின் திருமகனுக்கோ இக்கதி நேர்ந்தது” என்று கூறி மன வேதனை கொள்ள அதனை ஆற்ற இயலாதவராய்

சு.அருண்குமார் எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எட்., எம்.ஃபில்., நெட். – மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி.

மென்மையான பெண்கள் எல்லோரும் வீதியில் இருபுறமும் வாய்விட்டு அழுதபடி கூடியிருந்தனர்.

- அப்பெண்கள் கண்களில் கண்ணீர் சிந்தியபடி இறைத்திருமகனை வணங்கி நின்ற விதம், காந்தள் மலரும், செங்கமல மலரும் தோற்கும்படியாக அவர்களது சிவந்த கரங்கள் கண்ணீர் உகுத்திருந்தன.
- நெருங்கிய பற்களையுடைய சிவந்த ஆம்பல் வாய் திறந்து அழுத மாஞ்சோலைக் குயிலின் மென்மொழியராகிய பெண்கள் இயேசு பெருமானின் வருத்தத்தைக் கண்டுமதி மயங்கி நின்றனர்.

<u>மக்கள் கூறியது</u>

- இக்கொடுமைகளைக் கண்ட நகரத்து மக்களுள் சிலர் ஐயோ! இதென்ன கொடுமை? இச்செயல்கள் அனைத்தும் அநியாயமாயிற்றே என்றனர்.
- அழியாத அறம் தலை சாய்ந்து அழிவது தகுமோ என்றனர் சிலர். மூப்பில்லாத முதற் கடவுள் இக்கொடியவர்கள் பால் எதனால் கோபம் கொள்ளவில்லை என்றனர் சிலர்.
- இக்கொடுமைகளைக் கண்டு இடைவிடாது வருந்தும் என் உயிர்க்கு முடிவு வந்து சேராதோ என்று கூறி அழுது புலம்பினர் ஒருசிலர்.
- இழிந்த தொழிலை உடையவருக்கு அஞ்சி, நடுங்கி, நடுநிலை தவறி பொய் சாட்சி சொல்லி உயிர் வாழ்வதெல்லாம் ஒரு வாழ்வா? என்பார் சிலர்.
- அப்படி பொய்சாட்சி சொன்னவன் இல்லம் பாழாகவும், அவனுடைய வலிமையான குடிப்பெருமை குன்றி, அனைத்தும் பாழாகி எருக்கம் மலர்வது உறுதி. இது பொய்க்காது என்று சொல்லிப் புலம்பினர் சிலர்.

16. <u>கொலைஞர்கள் இறைத்திருமகனைச் சிலுவையில் அறைந்த காட்சியையும், அத்தருணத்தில் பெருமகனார் மேற்கொண்ட பொறுமையையும் குறித்து எழுதுக.</u>

- கொடும் பாவிகளின் இத்தன்மை பெருந்துக்கமாக எல்லோரையும் வருத்தும்படியாக இருந்தது. சொல்லுதற்கு அரிய துயரம் வருத்த, செருசலம் நகரை விட்டு வெளியே வந்த அக்கொடியவர்கள்,
- ஒப்பரிய ஆதிமூலத்து ஒரு பொருளாம் இறைமகனை கொலை களத்தில் வதை புரிவதற்காக (கொலை செய்வதற்காக) கொலைக்களத்தில் கொண்டு வந்து சேர்த்தனர்.
- அக்கொலைஞர்களை உண்மையை அழித்த வன்மனக் கொலைஞர்களென்றே அனைவரும் நினைத்தனர்.

<u>சிலுவையில் அறைதல்:</u>

- எம்பெருமான் திருமேனி தீண்டிய கொடியவர்கள், அவரைச் சிலுவையோடு சேர்த்தனர்.
- திருமகளின் சிவந்த கரங்களிலும், காண்பதற்கு இனிய சிவந்த பாதங்களிலும் கொடிய இரும்பினால் ஆன ஆணியை அறைந்தனர்.
- நிலத்தைத் தோண்டி நீண்ட சிலுவையை நிறுத்தி வைத்தனர். இச்செயல்களைக் கண்ட சத்தி என்னும் பர்ப்பனக் கன்னி, "இங்கு இனிமேல் என்னால் என்ன சொல்ல இயலும்" என்று சொல்லி அழுது புலம்பினாள்.

"மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்தும் இடப்புறத்தும்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயல்ஒழிய".

என்னும் வரிகளில் சிலுவையில் அறையப்பட்ட இறைத்திருமகனின் வலப்புற்திலும், இடப்புறத்திலும் திருடர்கள் இருவர் நிறுத்தி வைக்கப்பட்டனர் என்பது புலனாகிறது.

சு.அருண்குமார் எம்.ஏ., எம்.பி.ஏ., பி.எட்., எம்.ஃபில்., நெட். – மரீத் ஹாஜி இஸ்மாயில் சாஹெப் கலை & அறிவியல் கல்லூரி.

- அழியாச் சினத்தொடு அக்கொடியவர்கள் இத்திருடர்கள் இருவர் மத்தியில் இறைவனை நிறுத்தி தமது செயலைச் செய்து முடித்தனர்.

<u>இறைமகனாரின் பொறுமை:</u>

- தன்னுடைய திருமேனி சிதைந்ததோடு வலிகளால் தவிப்பெய்தி, பல பாடுகள் பட்டபோதும் அக்கொலைஞர்களுக்காகத் திருமகனார் பரிந்து பேசுகின்றார்.
- "என்னுடைய தந்தையே! இவர்கள் தாம் செய்வதை இன்னதென்று அறியாமல் செய்கின்றனர்.
- இவர்களது பிழையை மன்னியுங்கள்" என்று அருளே வடிவான வள்ளலான இயேசு பிரான் வணங்கிய விதம் அவரது பொறுமைக் குணத்திற்குச் சான்று பகர்வதாயுள்ளது.
- கொடியவர்கள் கொடுத்த அவப்பெயர்களையும் வலிகளையும் தாங்கியபடி, "எல்லாம் முடிந்தது, எம்முடைய தந்தையே! உம்முடைய திருக்கரங்களிலே எம் உயிரை ஒப்படைக்கின்றேன்!" எனத் திருவாய் மலர்ந்து தலைசாய்த்து உயிர் விடுத்தார்.
- இறைவனின் இப்பொறுமையும் எளிமையும் உலகம் உள்ளவரை பேசப்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

17. <u>பாண்டியனின் புகழ், வெற்றி, திறைச் சிறப்புகளை எழுதுக.</u>

<u>பாண்டியனின் புகழ்</u>

- முற்காலத்தில் அரசனுடைய பிறந்த நாளைத் திருவிழாவாகக் கொண்டாடுவது மரபு.
- உத்திராட நட்சத்திரத்தில் பாண்டியன் பிறந்ததால் அன்று ஊரே விழாக்கோலம் பூண்டது.
- ஊரையே அழுகுபடுத்தினார்கள். பகைவர்களுக்கும், குற்றம் புரிந்தவர்களுக்கும் விடுதலை அளிப்பார்கள். யானைகள், தேர்கள், இசைக்கேற்றபடி நடைபயிலும் குதிரைகள் என எல்லாவற்றின் பேரணிகளையும் நீக்கி, மாலை அணிவித்து மகிழ்வது பாண்டியனுக்கான புகழையும், பெருமையும் தெரியப்படுத்துவதாக உள்ளது.

<u>வெற்றி</u>

- பாண்டியனோடு போரிடும் எதிரிப்படைகள் பெரு வீரத்தொடு போர் புரிந்தனர்.
- அவர்கள் வேல் பிடித்து போர் செய்த விதம் பாண்டியனையே திகைக்கச் செய்தது.
- பெரும் சினத்தோடு தாக்கி வெற்றி பெற்றான் பாண்டியன். பாண்டியனோடு போரிடுபவர்கள் அவனுக்கு நிகரான வலிமை பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.
- மடித்த வாயினொடும், எதிரியின் கண்களை நோக்கிப் பாய்ச்சப் சுட்டி, உயர்த்தி வேலைப் பிடித்த கையினோடும்,
- மண்ணில் வீழாது தங்கள் ஆண் யானைகளின் மேல் வீழ்ந்து இறந்து கிடக்கும் அரசர்களை பாண்டியன் கண்டு இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லையே! என்னே இவர்களது வீரம்! என்று பாராட்டிய விதம் பகைவரையும் பாராட்டும் பாண்டியனின் பண்பை வெளிப்படுத்துகிறது.

<u>திறை:</u>

- முற்காலத்திலெல்லாம் வேற்று நாட்டின் மீது போர் தொடங்குவதற்கு நாள் பார்ப்பது வழக்கம்.
- நல்ல நேரத்தில் அரசனின் வெண்கொற்றக் குடையை, அரண்மனையை விட்டு ஊருக்கு வெளியே ஓரிடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு வருவார்கள்.
- நல்ல நேரத்தில் போருக்குப் புறப்பட்டுவிட்டோம் என்பது அதன் அறிகுறி.

- ஒருமுறை பாண்டிய மன்னனுக்கு மற்ற எல்லா அரசர்களும் குறிப்பிட்ட காலத்தில் கப்பம் செலுத்தத் தவறிவிட்டார்கள்.
- வெற்கொற்றக் குடையைப் பட்டத்து யானை மீது ஏற்றிக் கொண்டு போய் வேறிடத்தில் வைக்கச் சொன்னான்.
- அவ்வாறே பகை அரசர்கள் கலங்கி, அலறி அடித்துக் கொண்டு கப்பப் பொருளோடு வந்து அரண்மனை வாயிலில் நின்றார்கள்.
- கண் முன்னே நடந்த இக்காட்சியைக் கண்டு அனுபவித்த பாண்டிய மன்னனின் சேனைத் தலைவன் பாண்டிய மன்னனின் அரசாட்சித் திறத்தைப் பற்றி மற்றொரு வீரனிடம் கூறி வியக்கிறான்.

18. <u>சோழனின் வெற்றிச் சிறப்பையும், கொடைத் திறத்தையும் பற்றி குறிப்பிடுக.</u>

<u>சோழனின் வெற்றிச் சிறப்பு</u>

- சோழன் ஏந்திய வேலின்கண் உண்டாகிய ஒளி, நிலவொளி போல் தோன்றவே, அவனுக்கு ஒப்பாகக் கருதிப் போரிடுவதற்கு வந்த பகைமன்னர்களுடைய கடகங்கள் அணிந்த கைகளாகிய தாமரைகள் பலவும் அவனை வணங்குவதற்காகக் குவிந்துவிடும். அப்படிக் குவியும் தாமரைகள் நூறாயிரம் என்கிறார் புலவர்.
- நிலவைக் கண்டு தாமரைகள் குவிவது இயற்கை. நில்வொளிபோல் மக்களின் மனம் குளிரும் வகையில் இதமான அரசாட்சி செலுத்துவதால் பொன்னி வளநாடனாகிய சோழனது கைவேல் நிலவொளிக்கு நிகராகச் சொல்லப்பட்டது.
- போரிடத் துணிந்து பணிந்த பகைவர்களின் கரங்கள் குவியும் தாமரைகளாயின. பகைவர்களின் குவிந்த கரங்கள் சோழனின் வெற்றிச் சிறப்பைச் செப்புகின்றன.

<u>கொடைத்திறம்</u>

- தன்னிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்த புறாவினைக் காப்பதற்காக, அதன் நிறை அளவிற்கு ஈடாகத் தனது உடலை அறுத்து, தன் தசைதனைக் கொடுத்ததோடு, அது ஈடாகாது போகவே அவனே துலாத்தட்டில் ஏறி நின்றானாம். ஒரு புறாவுக்காகத் தனது உயிரையே தரத் துணிந்த சிபியின் பெருமையை என்னென்று சொல்வது என புலவர் வியந்து போற்றுகிறார்.

19. <u>சோழனின் திருவடிகள் புண்ணாகிச் சிவக்கக் காரணம் என்ன? விளக்குக?</u>

- சோழப்பேரரசு சிற்றரசுகளைக் கொண்டது. எத்தனையோ சிற்றரசர்கள் சோழனுக்குக் கப்பம் கட்டி அமைதியோடு வாழ்ந்தனர்.
- பொதுவாக, சோழன் அருள் உள்ளம் படைத்தவன். ஆனால் அறிவித்த நாளுக்குள் கப்பப் பொருள் வரவில்லையென்றால் சீற்றம் கொள்வான்.
- இதை நன்கு அறிந்திருந்த சிற்றரசர்கள் சோழனது கட்டளைக்கு உட்பட்டு அடிபணிந்து நடந்து கொள்வர்.
- சோழ மன்னனால் கப்பம் கட்ட குறிப்பிட்டிருந்த அந்த நாளில் பல நாட்டு மன்னர்களும் அவன் திருவடியில் முடிதாழ்த்தி வணங்கிக் கப்பம் செலுத்தினர்.
- அன்று மாலை வரை இந்நிகழ்ச்சி நடந்து கொண்டேயிருந்தது. மன்னர் மன்னனின் திருவடி, அடிபணிந்த அரசர்களின் மணிமுடிகள் உராய்ந்த காரணத்தால் புண்ணாகிவிட்டது.
- மறுநாள் வணங்க வரும் மன்னர்களிடம் சோழ அமைச்சர் காரணத்தை எடுத்துக்கூறி பொறுத்திருந்து கொடுக்குமாறு கேட்டனர்.

- ★ அமைச்சர் வாயிலாகச் சோழப்பேரரசின் பொற்காலத்தை அதன் உயர்வை நம் கண்முன்னே கொண்டு வந்து காட்டுகிறார் கவிஞர்.

20. <u>சேரனது, போர்க்களத்தில் வீறு கொண்ட யானையின் மாறுபட்ட செயல்பாட்டினையும், சேரனது வீரத்தையும் புலப்படுத்துக.</u>

<u>யானையின் செயல்பாடு</u>

- சேரனிடத்து காணப்படும் நால்வகைப் படைகளில் யானைப்படை மட்டும் சற்று மிகுந்திருந்தது.
- குற்றம் செய்த பகைவரைக் கண்டவிடத்து இயல்பாகவே சிவக்கும் கண்களையுடைய சேர மன்னனது யானைப் படையில் கோபமும், மதமும் கொண்ட யானைகள் இருந்தன.
- அந்தப் போர் யானைகளில் ஒன்று போர் செய்வதில் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்தது.
- "படைபலம் பெருத்த மன்னர்களது விரிந்து பரந்த மாலையோடு அடியோடு பெயர்த்து எறிந்து கொண்டே வந்த பழக்க உணர்ச்சியில், எதிரில் மாற்றார் படை ஒன்றும் காணாது, சற்றும் சிந்தியாது, மேல்நோக்கிப் பார்த்து முழுநிலவை மாற்றார் குடை எனக் கருதித் தன் துதிக்கையை நீட்டும்" என்று புலவர் விளக்குகிறார்.
- இது சேரனின் படைபலம் சொல்லும் யானைக்கு உள்ள போர்க்குணத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

<u>சேரனது வீரம்</u>

- சேரனைக் கண்டு பொறாமை கொண்ட பல மன்னர்கள் ஒரே நேரத்தில் அவனுக்குப் பகைவர்களாகி எல்லோரும் ஒன்று சேர்ந்து அவனை எதிர்த்தனர்.
- போரில் தனது வீரத்தைச் சேரன் காட்டியதில் எதிரிகள் தோல்வியுற்று களத்தில் வீழ்ந்தனர்.
- வீழ்ந்த வீரர்களின் மார்பில் மகரதப்பூண், கையில் வயிரக்கடகம், தோள்களில் கனத்தி காப்பு வளைகள் எனப் பல அணிகலன்களை அணிந்திருந்தனர். இறந்து கிடக்கும் இவர்களைத் தின்பதற்கு நரிக்கூட்டங்கள் வந்தன.
- அதில் ஒரு நரிக்குட்டி மன்னர்களின் வயிரக் கடகமிட்ட கையைக் கடித்து இழுத்தது. வயிரக்கடகம் வாக் கிழித்து விட்டது.
- இழுத்த வேகத்தில் தோளிலிருந்த காப்புகளை தலையினும், வாயிலும் புண் உண்டாகி இரத்தம் வடிய ஆரம்பத்து விட்டது.
- வலியை தாங்கிக் கொள்ள முடியாத நிரிக்குட்டி தன் தாயைக் கதறி ஊளைவிட்டு அழைத்தது. இது ஓரிடத்தில் மட்டுமல்ல.
- போர்க்களதில் பல பகுதிகளிலும் நரிக்கூட்டம் ஊளையிட்டுக் கதறிற்று" இது சேரனது வீரத்திற்குச் சான்று பகர்வதாக உள்ளது.

21. <u>சேரன் மீது ஒருதலையாகக் கைக்கிளைக் காதல் கொண்ட பெண்ணின் எண்ண ஓட்டத்தினை முத்தொள்ளாயிரம் வழி நின்று விளக்குக.</u>

- ❖ முற்காலத்தில் இறைவன் திருவீதிஉலா வருவது போல் மன்னர்களும் உலா செல்வது வழக்கம். அப்படி சேரன் ஒருமுறை தேரேறி திருவீதிஉலா சென்ற போது,
- ❖ அவன் சேரமன்னன் என்று அறிந்திராத ஒரு பெண் ஒரு தலையாக அவன் மீது காதல் கொள்கிறாள்.
- ❖ அப்போது, "இவன் யாராக இருக்கக்கூடும்? இவனாக இருப்பானோ? ஒரு வேளை அவனாக இருப்பானோ?" என்று ஒப்பிட்டுப் பார்க்கிறாள்.

- ❖ முதலாவதாக அவள் நினைவுக்கு வருவது, வானத்து தேவர்களின் தலைவனாகிய இந்திரன். இவனை ஒருவேளை இந்திரனாக இருக்கக் கூடுமோ என்று எண்ணியவளுக்கு உடனே அந்த எண்ணம் மறைகிறது.
- ❖ ஏனெனில் இந்திரனுக்கு ஆயிரம் கண்களாயிற்றே! இவனுக்கு இரண்டு கண்கள் தானே இருக்கிறன! ஆதலால் இவன் இந்திரனாக இருக்க முடியாது! எனத் தெளிகிறாள்.
- ❖ "ஒருவேளை காளை வாகனத்தில் பவனி வரும் சிவபெருமானாக இருப்பானோ என்று எண்ணுகிறாள். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்கிறாள்.
- ❖ ஏனெனில் சிவபெருமான் தலையில் பிறை இருக்குமே! இவன் தலையில் பிறை இல்லையே! ஆகவே இவனை சிவனும் இல்லை என்று தெளிவடைகிறாள்.
- ❖ அடுத்ததாக ஒரு வேளை இவன் கோழிக்கொடியைத் தாங்கிய முருகனாக இருப்பானோ என்று எண்ணுகிறாள்.
- ❖ மறுவினாடியே அந்த எண்ணம் மாறுகிறது. ஏனெனில் முருகனுக்கோ ஆறு முகங்கள். ஆனால் இவனுக்கோ ஒரே ஒரு முகம் தான்.
- ❖ ஆகவே இவன் முருகனாகவும் இருக்க முடியாது என்று தெளிவடைகிறாள். இதனை,

> "இந்திரன் எண்ணின் இரண்டேகண் ஏறுர்ந்த
> அந்தரத்தான் என்னிற் பிறையில்லை - அந்தரத்துக்
> கோழியான் என்னின் முகனொன்றே"

என்ற வரிகளால் அறிந்து கொள்ளலாம்.

- ❖ இப்படி தன்னுடைய சிந்தனையைச் சுழலவிட்ட அந்தப்பெண், "இவன் இந்திரனும் இல்லை. சிவபெருமானும் இல்லை. முருகனும் இல்லை. அழகே வடிவான மற்ற தேவர்களுள் ஒருவனும் இல்லை.
- ❖ அப்படியானால் இந்த அழகன் கடல் சூழ்ந்த இந்த உலகத்தை ஆளும் சேர மன்ன னாகத் தான் இருக்கமுடியும்" என்று தெளிவடைகிறாள்.
- ❖ சேரனின் அழகு, வானுலகத் தேவர்களின் அழகுக்கு இணையானது என்பது தெளிவாகிறது.

---

1. **தேவாரம் - திருஞானசம்பந்தர்** - அந்தணர் குலம் - பெற்றோர் சிவபாத இருதயர், பகவதி அம்மையார் - மூன்று வயதில் உமையம்மையிடம் ஞானப்பால் உண்டதால் ஞானசம்பந்தன் -முதல் பாடல் 'தோடுடைய செவியன்' - பன்னிரு திருமுறையில் முதல் மூன்று - (நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் - சுந்தரர்) - (ஆதிசங்கரர் - திராவிடசிசு) - (பிள்ளைபாதி புராணம் பாதி - பெரியபுராணம்) - பாடியது 16000 பதிகங்கள் - 384 கிடைத்தது - திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்க்க கிழக்கு கோபுர வாசல் சம்பந்தர் - மேற்கு கோபுர வாசல் நாவுக்கரசர் - சிவந்த மேனி - திருவெண்ணீறு - காளை - பாம்பை அணிகலன் - பாதுகாப்பு - வீடுபேறு - வேதங்கள் - காமன் நெற்றிகண் - கட்டப்பட்ட சடை - நீலமணி கண்டம் - உமையம்மை ஒரு பாகம் - கங்கை சூடிய திருமுடி - இராவணன் கயிலை 8ஆம் பாடல் - நான்முகன் திருமால் அடிமுடி 9ஆம் பா. - சமணர்கள் அரியாதவர்கள் (சமண பழிப்பு) 10ஆம் பா. - சீர்காழி பிறந்த சம்பந்தன் 11ஆம் பா.

2. **திருவாசகம் - மாணிக்கவாசகர்** (பிடித்த பத்து) - பாண்டிய நாட்டில் திருவாதவூர் - அரிமத்தன பாண்டியன் - திருப்பெருந்துறையில் சிவஞானம் - பாடியது திருவாசகம், திருக்கோவையார் - "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" - தாய், தந்தை, மாணிக்கம், கடலில்

உண்டான அமிழ்தம், சிவபதம் - அருட் சுடர், பக்குவப்பட்ட கனி, தவம்செய்பவருக்கு அரசன், புகழ்ச்சிக்கு அடங்காதவர் - தனக்குவமை இல்லாதவன், பேரின்பத்தையளிப்பவன், சுடர்வடிவினன், முத்தியளிப்பவன், ஒப்புனக்கில்லாதவன் - பாசவேரைக்களைத்து சிவபதத்தையளித்தவன், சிந்தையில் தாமரை மலர் திருவடி, ஒளி விளக்கு, விளக்கின் ஒளி - உடம்பினை உருக்கி, ஞான ஒளியை பெருக்கி, உள்ளத்தில் இன்பம், தேனினை சுரந்த செல்வம், உயரிகளிடம் பேரருள் - சிக்கெனப் பிடித்தேன்.

3. திருமந்திரம் - திருமூலர் - தமிழ் மூவாயிரம், திருமந்திரமாலை - 3000பாடல்கள் - 9தந்திரங்கள் - 5ஆம் நூற்றாண்டி - பன்னிருதிருமுறையில் 10ஆம் திருமுறை - உள்ளம் கருவறை, ஊனுடம்பு ஆலயம்.

4. திருப்பாவை - ஆண்டாள் - பூரநட்சத்திரம் - கோதை இயர்பெயர் - சூடிக்கொடுத்த சுடர்கொடி - திருப்பாவை, நாச்சியார் திருமொழி - சங்கதமிழ் மாலை முப்பது - இராமானுஜர் திருப்பாவை ஜீயர்.

5. திருப்பள்ளியெழுச்சி - தொண்டரடிப்பொடியாழ்வார் - சோழநாட்டில் திருமண்டங்குடி - இயர்பெயர் விப்ரநாராயணர் - திருப்பள்ளியெழுச்சி, திருமாலை.

6. பெருமாள் திருமொழி - குலசேகராழ்வார் - திருவஞ்சைக்களம் - மாசிப் புணர்பூசம் கௌத்தவ மணியின் அவதாரம் - சேர மன்னர் - கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக்கோன் - கி.பி.9ஆம் நூற்றாண்டு - திருவரங்கத்து 3ஆம் மதிலை கட்டியவர் - வடமொழியில் முகுந்தமாலை, தமிழில் பெருமாள் திருமொழி - 105பாசுரங்கள் - நாரை, மீன், சண்பகமரம், புதர்.

7. தமிழ்விடு தூது - (சைவப் பற்று, தமிழ் பற்று - ஆசிரியர் பெயரில்லை) - 268 கண்ணிகள் - பாட்டுடைத் தலைவன் மீது காதலுற்ற ஒருத்தி, அவனிடமிருந்து மாலை வாங்கி வருமாறு, ஒரு பொருளைத் தூதனுப்புவது, தூதாகும்.

தலைவனின் பெருமை, தலைவியின் காதல், ஆற்றாமை, பிற பொருட்கள் தூது அனுப்ப இயலாமை, தூது செல்லும் பொருளின் சிறப்பு.

மதுரைச் சொக்கநாதர்பால், தலைவி ஒருத்தி தன் விருப்பத்தை எடுத்துரைக்குமாறு தமிழைத் தூதாக விடுக்கும் பாங்கில் அமைவதால் இது தமிழ்விடு தூது எனப்பட்டது. -தமிழ் இலக்கணம், இலக்கியம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் எனப் பல நூல்களின் கருத்துக்கள் இந்நூளில் இடம்பெற்றுள்ளது.

8. திருக்கயிலாய ஞான உலா - சேரமான் பெருமாள் நாயனார் - 197 கண்ணிகள் - சைவத்திருமுறைகளுள் பதினோராம் திருமுறை - பாட்டுடைத் தலைவன் வீதி உலா வரும்போது, அவனைக் கண்டு ஏழுப்பருவ மகளிரும் காதல்கொண்டு மயங்கி வாடுவதாகக் கலிவெண்பாவில் பாடுவது உலா.

சுந்தருடன் கயிலாயம் சென்ற சேரமான் பெருமாள் நாயனார், அங்குப் பாடியருளிய இவ்வுலாவைச் செவிமடுத்த மாசாத்துவான் என்ற ஐயனார் சோழ நாட்டுத் திருபிடவூரில் வெளியிட்டாரென பெரியபுராணம் கூறுகிறது.

9. தஞ்சைவாணன் கோவை - பொய்யாமொழிப் புலவர் - தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த துறையூர் - தஞ்சைவாணன் மனைவி ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பொன்னால் செய்யப்பட்ட தேங்காயைப் பரிசளித்தாள். அத்தேங்காயின் மூன்று கண்களிலும் மூன்று மணிகள் இருந்தன - 13ஆம் நூற்றாண்டு.

தஞ்சைவாணன் பாட்டுடைத் தலைவன், பொய்யாமொழியாரை ஆதரித்தவன், இவனின் பல்வேறு சிறப்புகளை புகழ்ந்துரைக்கின்றது தஞ்சைவாணன் கோவை.

10. திருவருட்பா - இராமலிங்க அடிகளார் (6ஆம் திருமுறை பிள்ளைச் சிறுவிண்ணப்பம்) - சிதம்பரத்திற்கு அருகில் மரூதூர் - 05.10.1823 பிறந்தார் - இராமையா, சின்னம்மை - சிறப்புப் பெயர்

திருவருட் பிரகாச வள்ளலார். - வழிபடும் கடவுள் முருகன், வழிபடும் நூல் திருவாசகம், வழிபடும் குரு திருஞானச் சம்பந்தர் - மரணமில்லா பெரு வாழ்வு, இறைவனின் அடிமுடி கண்டது, மணிமுடி, செங்கோல், கங்கணம், ஆழி - முதல் நூல் சென்னைக்கோட்டத்து முருகன் மீது பாடிய தெய்வமணிமாலை.

மூவர் முதலிகள் பாடிய தேவாரம், மாணிக்கவாசகரின் திருவாசகம், அருணகிரியாரின் திருப்புகழ், இராமலிங்கர் பாடிய திருவருட்பா (6திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளது).
கடவுள் ஒருவரே, கடவுள் சோதிவடிவினர், சாதிமத பேதங்கள் கூடாது, மூடப்பழக்கவழக்கங்கள் நீங்க வேண்டும் என்று கூறியவர்.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் இரு நூல்கள் எழுதியும் - ஒழிவிலொடுக்கம், தொண்டை மண்டல சதகம், சின்மய தீபிகை எனும் நூல்களை பதிப்பித்தும் - சன்மார்க்க சங்கம், சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை, சித்தி வளாகம் எனும் அமைப்புகளை நிறுவியும் செயல்பட்டார்.

11. இரட்சணிய யாத்திரிகம் - எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை - கிறிஸ்துவக் காப்பியங்களில் தலைசிறந்தது தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், 2கண்கள் - இரட்சணிய யாத்திரிகம் முதனூலன்று வழிநூல், ஜான்பணியன் எழுதிய திருப்பயணியின் முன்னேற்றம் என்னும் நூலைத்தழுவி எழுதப்பட்டது - அறம், பொருள், இன்பம், வீடு - ஆதி பருவம், குமார பருவம் - இரட்சணிய சரிதப்படலம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என 5பருவங்களைக் கொண்டது - 3766 பாடல்கள், 2190 விருத்தப்பாக்களால் எழுத்தப்பட்டது.
கவியரசர் கிருஷ்ணப்பிள்ளை (1827 - 1900) கிறித்து பெருமானிடம் மிக்க ஈடுபாடு கொண்டு வாழ்ந்த தமிழ்ப்புலவர் - இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் - கம்பராமாயணம் நன்கு கற்றவர், கற்பனை வளமும், தமிழ்மொழி நலமும் மிக்கவர், திருக்குறளின் செல்வாக்கை அவர் பாடல்களில் காணமுடிகிறது.

12. மஸ்தான் சாகிபு பாடல்கள் - குணங்குடி மஸ்தான் சாகிபு - இராமநாதபுரம் மாவட்டம் குணங்குடி - சுல்தான் அப்துல் காதிறு லெப்பை ஆலிம் - மஸ்தான் என்றால் ஞானி எனப் பொருள் - தமிழிலும், அரபு மொழியிலும் புலமை - அத்தர் வாணிகம் செய்தவர் - திருமணத்தன்றே மனைவியாகவிருந்த பெண்ணை விடுத்துச் சென்று, துறவறம் மேற்கொண்டவர் - துறவியாகிச் சென்னை இராயபுரத்தில் வாழ்ந்து பல அர்புதங்களை நிகழ்த்தினார்.
இருடைய பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள் என அழைக்கப்பட்டன, தாயுமானவர் பாடல்களைப் போன்று இவர் பாடல்கள் இருப்பதால், இஸ்லாமியத் தாயுமானவர் எனப் போற்றப்படுகிறார். தொகுத்தவர் சீயமங்கலம் அருணாசல முதலியார்.

13. முத்தொள்ளாயிரம் - ஆசிரியர் பெயர் தெரியவில்லை - மூவேந்தரின் ஆட்சி சிறப்பு, வீரம், கொடை, நான்கு வகைப்படைகள் - பெண்பாற் கைக்கிளை காதலைக் கூறுகிறது - 2700 பாடல்களில் கிடைத்தவை 109 பாடல்கள் - வெண்பா யாப்பாள் ஆனது - அழகிய ஆற்றொழுக்கு நடையால் இயன்றது - காட்சிகள் நாடகப் பாணியில் அமைந்தவை.